# பதினொன்றாம் வகுப்பு
# ஒரு மதிப்பெண் வினாக்கள் :
# இயல் - 1
# என்னுயிர் என்பேன்

## 1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. கலைகளின் உச்சம்
அ) கட்டுரை ஆ) கதை இ) கவிதை ஈ) நாடகம்
2. பாயிரம் அல்லது------ அன்றே
அ) காவியம் ஆ) பனுவல் இ) கவிதை ஈ) பாடல்
3. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் கூடில்லாத பறவை என்றுகூறியவர்
அ) இரசூல் கம்சதோவ் ஆ) பாப்லோ நெரூடா இ) மல்லார்மே ஈ) வால்ட் விட்மன்
4. நன்னூல்அ) முதனூல் ஆ) வழிநூல் இ) சார்பு நூல் ஈ) மொழிபெயர்ப்பு நூல்
5. ஆறாம் திணை எது?
அ) மலையும் மலை சார்ந்த இடம் ஆ) கடலும் கடல் சார்ந்த இடம் இ) காடும் காடு சார்ந்த இடம் ஈ)பனியும் பனி சார்ந்த இடம்
6. மொழி முதல் எழுத்துக்கள் எத்தனை?
அ) 12 ஆ) 22 இ)24 ஈ) 18
7. தவறான இணையைத் தேர்க.அ) மொழி͵ஆளுமைஸ்ரீஉயிர்͵உயிர் ஆ) கடல்͵அலைஸ்ரீ உயிர்͵மெய் இ) தமிழ் +அறிஞர் = மெய்+உயிர் ஈ) மண்+ வளம் = மெய் +மெய்
8. உதித்த - இலக்கணக் குறிப்புஅ) வினையெச்சம் ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) பெயரெச்சம்
9. தமிழ்ச்சொல்லைக் கண்டறிக
அ) விசா ஆ) யுகம் இ) ஊதியம் ஈ) தருணம்
10. இதழாளர் என்பதன் கலைச்சொல்
அ) Aesthetic ஆ) journalist இ) Art Critic ஈ) Philosopher

## 2.ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
1. காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்
அதிகாலை நேரத்தில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்
2. முயற்சி செஞ்சா அதுக்கேற்ற பலன் வராம போவாது.
முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.
3. காலத்துக்கேத்த மாரி புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்
காலத்துக்கேற்றபடி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்
4. ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமா பதிய வைக்கனும்
ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.
5. தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனா பதட்டமாயிரும்
தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள், நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.
6. கவிதையினை பேசுவதுபோல் எழுதுவதே உத்தமம் என்றவர் யார்? ___ பாரதியார்
7. மொழியென் ஒன்று பிறந்தவுடன்"உலகம் " என்பதும் "நான்" என்பதும் தனித்தனியாக பிரிகிறது என்றவர் யார்? எர்னஸ்ட் காசிரர்
8. பேச்சுமொழியினை கவிதைகளில் பயன்படுத்துபவர்கள் எத்தனை வகையினர்? 3
9. புதுகவிதையின் இயக்கத்தை தோற்றுவித்தவர் யார், எந்தநாட்டைச் சார்ந்தவர்? வால்ட் விட்மன், அமெரிக்கா.
10..ஸ்டெ/பான்மல்லார்மே எந்நாட்டைச் சேர்ந்தவர்? ___ பிரான்ஸ்
11. "தமிழின் கவிதையியல்" நூலாசிரியர் யார்? - கா. சிவத்தம்பி

12. இந்திரனின் இயற்பெயர் - இராசேந்திரன்
13. உயிர்த்தெழும் காலத்துக்காக எனும் கவிதை தொகுப்பின் ஆசிரியர் - சு.வில்வரத்தினம்.
14. பறவைகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம் - ஒரிய மொழி
15. கவிதையை இயற்றுவதுடன் சிறப்பாக பாடும் ஆற்றல் கொண்டவர் யார்? சு. வில்வரத்தினம்.
16. தமிழில் முதல் இலக்கண நூல் எது? - தொல்காப்பியம்.
18. நன்னூல் எத்தகைய நூல் - வழிநூல்
19. நன்னூல் கூறும் இலக்கண வகைகள் எவை? - எழுத்து, சொல்
20. பவணந்தியார் நன்னூலை யார் வேண்டுகோளுக்கு இணங்க பாடினார்?சீயகங்கன்என்றசிற்றரசர்
22. நூலின் பெருமையை அலங்கரித்து சொல்லுவது ___ அணிந்துரை, புனைந்துரை
23. ராபின்சன் குரூசோ- என்ற நூலின் ஆசிரியர் யார்? ___ டேனியல் டி/போ
24. கடல்புறா என்னும் நூலின் ஆசிரியர் யார்? சாண்டில்யன்
25. ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூலை எரித்தால் போதும் - என்னும் நூல் எது? /பாரன்ஹூட் 451
26. தமிழர் பாரம்பரிய நாள் எது? ___ ஜனவரி 14
27. உலகின் 2 ___வது பெரிய தேசம் - கனடா
28. ஆறாம் தினை எது? - பனியும் - பனிசார்ந்த இடம்.
29. ஙனம் என்பதன் பொருள் யாது? - விதம்
31. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? ஆறு
32. கலைகளின் உச்சம் - கவிதை
33. உணர்ச்சிக்கு மிக அருகில் இருப்பது எம்மொழி? - பேச்சு மொழி
34. கவி ஆற்றூர் ரவி வர்மா எம்மாநிலத்தைச் சார்ந்தவர்? - கேரளா
35. எந்தஒரு சொல்லும் மற்றொரு சொல்லை விட முக்கியமானதாகிவிடாது என்றவர் வால்ட்விட்மன்
36. பாப்லோ நெருடா எந்த மொழிக் கவிஞர் - ஸ்பானிஷ்
37. வால்ட் விட்மன் கவிதையை தமிழில் மொழிப்பெயர்த்தவர் - சங்கர் ஜெயராமன்
38. மல்லார்மேவின் பிரென்ச் மொழி கவிதையை மொழிப்பெயர்த்தவர் - வெஸ்ரீராம்
39. பாப்லோ நெருடாவின் கவிதையை மொழிப்பெயர்த்தவர் ஆ.இரா.வேங்கடாசலபதி
40. ஒரு இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவது ------ - மொழி
41. தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லா மரம் என்றவர் - இரசூல் கம்சதோவ்
42. எழுத்ததிகாரம் எத்தனை எத்தனை பகுதிகளாக உள்ளன? ___ 5, 5
43. அ. முத்துலிங்கம் இலங்கையில் எங்கு தங்கி இருந்தார்? - மவுண்லவினியா
44. ராபின்சன் குரூசோ என்ற புத்தகத்தை மட்டும் கையில் வைத்து அலைந்தவர்யார்? அ. முத்துலிங்கம்
45. புலம் பெயர்தல் சங்க இலக்கியத்தில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது? - பொருள்வயின் பிரிவு
46. திருக்குறளையும், திருவாசகத்தையும் மொழிப்பெயர்தவர் யார்? - ஜி.யு. போப்
47. ஜி.யு.போப் எந்தநாட்டைச் சார்ந்தவர் - - கனடா
48. எதனை சாகடித்தால் மனிதன் செத்துவிடுவான் - அறிவை
49. உலகம் முழுவதும் எத்தனை கோடி தமிழர்கள் இருக்கிறார்கள்? - 8 கோடி
50. கனடாவில் எத்தனை லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள்? - 3 இலட்சம்
51. தமிழர் பாரம்பரிய நாள் எது? - தமிழர் திருநாள் ஜனவரி 14
52. தமிழர் திருநாளாக ஜனவரி 14 நாளை எந்த ஆண்டு அறிவித்தார்கள் - 2012
53. வன்னி வீதி எங்கு உள்ளது? - கனடாவில்
54. ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்களை கொண்ட நூல் எது ___ ஐங்குறுநூறு
55. காகம் எவ்வளவு தூரம் வரை பறக்கும் - 2 மைல்

55. ஆறு மணிக்குருவி எவ்வளவு தூரம் வரை பறக்கும்? ___ எல்லையே கிடையாது
56. அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் - சிறுகதையின் ஆசிரியர் - அ. முத்துலிங்கம்.
57. இலங்கை அரசின் சாகித்தியப் பரிசினை பெற்ற நூல் எது? - வடக்கு வீதி
58. மீனாட்சிசுந்தரனார் பிறந்த ஊர் - திருச்சி, அதவத்தூர்
59. சேக்கிழார் பிள்ளைத்தமிழை இயற்றியவர் - மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்
60. உ.வே.சா. தியாகராசர், குலாம்காதிறு ___ யாருடைய மாணவர்கள்
- மீனாட்சி சுந்தரனாரின் மாணவர்கள்

## 3.குறுவினாக்கள்:

1.பேச்சு மொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டு சக்தி மிக்கது ஏன்"?
2. கவிஞர்கள் நேரடி மொழி என்று எதைக் கருதுகிறார்கள்?
3. இந்திரன் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் எது? அது எம்மொழியின் மொழிப் பெயர்ப்பு?
4. மூன்று வகைக் கவிஞர்கள் யார்?
5. புதுக்கவிதை ___ விளக்கம் தருக.
6. இனம், மொழி குறித்த இரசூல் கம்பதோவ் பார்வையைக் குறிப்பிடுக
7. கவிஞர் சு.வில்வரத்தினம் பற்றி குறிப்பெழுதுக.
8. பாயிரம் எதற்கு உதவுகிறது?
9. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
10. மொழிக்கு இறுதியில் வரும் எத்தனை? எடுத்துக்காட்டு தருக.
11. உயரீறு, மெய்யீறு - விளக்குக.
12. உயிர் முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டு தருக.
13. குற்றியலுகரத்தின் ஆறுவகைகளையும் சான்றுடன் விளக்குக.
14. இலக்கண வகையில் சொற்கள் எத்தனை வகைப்படும்?

## 4.சிறுவினாக்கள்

1. மொழி முதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.
2. சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்கு எங்ஙனம் பொருந்துகிறது.
3. "என்னுயிர் தமிழ்மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
4. கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?
5.நூல் ஒன்றில் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

## 5.பெரு வினாக்கள்:

1.தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறுஇணைக்கப்படுகிறது?
2.நன்னூல் பொதுப்பாயிரம்,சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக:
3.நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும்,எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க:

# இயல் - 2

## மாமழை போற்றுதும்

### 1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1.ஒற்றை வைக்கோல் புரட்சி என்ற நூலின் ஆசிரியர்
அ) நம்மாழ்வார் ஆ) மசானுபு/புகோகா இ) சொக்கலிங்கம் ஈ) மங்கை
2. மதிப்புக்கூட்டு பொருள்கள் எவை?அ) நுங்கு ஆ) பதநீர் இ) கருப்பட்டி,பனங்கற்கண்டு ஈ) சர்க்கரை
1. உலக சிட்டுக்குருவிகள் நாள்
அ) மார்ச் 02 ஆ) ஏப்ரல் 02 இ) மார்ச் 20 ஈ) ஏப்ரல் 20
1. 2003 ஆம் ஆண்டு தமிழக அரசின் விருது பெற்றவர் யார்?
அ) அழகிய பெரியவன் ஆ) பெரியவன் கவிராயன் இ) ஜெயமோகன் ஈ) நம்மாழ்வார்
5. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வள்ளுவர் ஈ) கவிமணி
1. புலன் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்த நூல்
அ) பள்ளு ஆ) குறுந்தொகை இ) புறநானூறு ஈ) நற்றிணை
1. மண்ணுக்கு வளம் சேர்ப்பனஅ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
8. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்கள்
அ) அச்சம், கப்பம் ஆ) பாட்டி,தேர்தல் இ) வெற்றி,தந்த ஈ) எச்சம்,காட்சி
9. வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்கள்
அ) அச்சம், கப்பம் ஆ) பாட்டி,தேர்தல் இ) மஞ்சள்,தந்த ஈ) எச்சம்,காட்சி
10. வழி, வளி என்பதன் பொருள்
அ) காற்று,பாதை ஆ) பாதை,காற்று இ) பாதை,வலிமை ஈ)காற்று,வலிமை

### 2.ஒரு மதிப்பெண் வினாக்கள் :

1. ஏதிலிக்குருவிகள் கவிதையின் ஆசிரியர் - அழகிய பெரியவன்
2. திருமலை முருகன் பள்ளுவின் ஆசிரியர் - பெரியவன் கவிராயர்
3. முல்லை திணையை பாடியவர் --- பேயனார்
4. யானை டாக்டர் யார? - வி. கிருஷ்ணமூர்த்தி
5. யானை டாக்டர் சிறுகதையை எழுதியவர் யார்? - ஜெயமோகன்
6. "உழவு உலகிற்கு அச்சாணி என்று கூறியவர் --- - வள்ளுவர்
7. உழவுக்கும் தொழிலக்கும் வந்தனை செய்வோம் என்றவர் - பாரதியார்
8. நம் மாநில மரம் எது? - பனைமரைம்
9. ஏழைகளின் கற்பக விருட்சகம் எது? - பனைமரம்
10. பூச்சிக் கொல்லியால் மண் ----- ஆகும் - நஞ்சாகும்
11. ஊடுபயிர் எது? - உளுந்து
12. பிளாஸ்டிக் உறைக்கு தமிழ் சொல் - நெகிழி பை
13. வைக்கோலை பற்றி மிகச் சிறந்த ஆய்வு செய்தவர் - மசானபு/புகோகோ.
14. மசானபு/புகோகோ எந்த நாட்டைச் சார்ந்தவர்? - ஜப்பான்
15. ஒற்றை வைக்கோல் புரட்சி எனும் நூலில் கூறப்பட்டுள்ள விவசாய மந்திரங்கள் எத்தனை? 5
16. இயற்கை சாம்பல் எதிலிருந்து எடுக்க வேண்டும்.? - ஆடு மாடு சாணம் எரிப்பதிலிருந்து
17. உளுந்து வேர் முடிச்சில் இருக்கும் வாயு ------ - நைட்ரஜன்
18. இயற்கை வேளாண்மையின் முன்னோடி என அழைக்கபடுபவர் - நம்மாழ்வார்
18. உயிர்கள் எப்பொழுது மலர்கின்றன? - மழைத்துளி விழுந்தவுடன்
19. உலக சிட்டுக் குருவிகள் நாள் -------- - மார்ச் 20
20. அழகிய பெரியவனின் இயற்பெயர்-- - அரவிந்தன்
21. இழகிய பெரியவனின் தமிழக அரசின் விருது பெற்ற நூல் - தகப்பன் கொடி
22. மீள்கோணம், பெருகும் வேட்டை என்பது யாருடைய கட்டுரை நூல் - அழகிய பெரியவன்
23.ஆரளி ___ என்பதன் பொருள் யாது? - வண்டு

24. வட ஆரி நாடு என்பது தற்போதைய திருமலை
25. தென் ஆரி நாடு என்பது தற்போது--- - குற்றாலம்
26. நுகம், வள்ளைக்கை, கொழு, கயமரம் என்பது ---- - உழவுக் கருவிகள்
27. பள்ளு இலக்கியத்திற்கு குறிப்பிடப்படும் வேறு பெயர் - உழத்திப் பாட்டு
28. பள்ளு எனும் இலக்கியம் தொல்காப்பியத்தில் எந்தவகையைச் சார்ந்தது ___ பள்ளு
29. திருமலை முருகன் பள்ளு நூலின் ஆசிரியர் ---- பெரியவன் கவிராயர்
30. திருமலை எங்குள்ளது? - திருநெல்வேலி மாவட்டம் பண்புளிப்பட்டணம்
31. கார்காலத்தில் மலரும் மலர் எது? - முல்லை
32. ஐங்குறுநூறு அடிவரையரை யாது? - 3 ___ 6
33. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்து பாடியவர்---- - பாரதம் பாடிய பெருந்தேவனார்
34. ஐங்குறுநூறு தொகுத்தவர்- புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்
35. தொகுப்பித்தவர் - யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை
36. பேயனர் இயற்றிய எத்தனை பாடல்கள் கிடைத்தள்ளன?- 105
37. திருமலை முருகன் பள்ளுவிற்கு வழங்கும் வேறு பெயர்கள் - பள்ளிசை, திருமலைஅதிபர்பள்ளு
37. யானைகளை எவ்வாறு அழைப்பர்? - காட்டின் மூலவர்
38. காட்டில் வசித்த இனம் எது? - குறும்பர்
39. யானை தலையை குலுக்கினால் என்ன அர்த்தம் - தாக்குவேன் என்று அர்த்தம்
40. யானைகள் ஏறத்தாழ எத்தனை ஆண்டுகள் வாழும்? - 70
41. இக்கதையில் வரும் குட்டி யானையின் பெயர் யாது? ___ மஞ்சணத்தி
42. யானையைப்பற்றி குறிப்பிடப்படும் சங்க இலக்கியம் எது? கலித்தொகை
43. விஷ்ணுபுரம், கொற்றவை- யாருடைய நாவல்கள்? - ஜெயமோகன்
44. யானையை மையமாக வைத்து எழுதிய நூல் எவை? ___ ஊமைச்செந்நாய், மத்தகம்.
45. யானை டாக்டர் எனும் சிறுகதை எந்த சிறுகதை தொகுப்பில் உள்ளது? ___ அறம்.
46. தமிழிசை இயக்கத்தின் தந்தை ---- - ஆபிரகாம் பண்டிதர்
47. ஆபிரகாம் பண்டிதர் பிறந்த ஊர்----- - தென்காசி ___ சாம்பவர் வடகரை
48. பண்டுவர் என்றால் என்ன? - மருத்துவர்
49. ஆபிரகாம் பண்டிதர் ஏற்படுத்திய அமைப்பின் பெயர் - சங்கீத வித்தியா மகாஜன சங்கம்
50. ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய இசை நூல்--- - கருணாமிர்த சாகரம்

**காவியம்**

1. பிரமிளின் இயற்பெயர் யாது? சிவராமலிங்கம்
2. பிரமிளின் புனைப்பெயர்களைக் குறிப்பிடுக. பானுசந்திரன், அரூப் சிவராம், தருமு சிவராம்
3. பிரமிள் மிகுந்த ஈடுபாடுக் கொண்ட இரு கலைகள் யாவை? ஓவியம், சிற்பம்

## 3.குறுவினாக்கள்:

1. தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக.
2. பனை மரத்தின் பயன்கள் யாவை?
3. மதிப்பக் கூட்டுப்பொருள்கள் என்றால் என்ன?
4. மண் நஞ்சாகக் காரணம் என்ன?
5. நெற்பயிரும் மாரிகாலப் பயிரும் வளர்வதற்கான வழிமுறைகள் யாவை?
6. மசானபு/புகோகோ பற்றி குறிப்பு வரைக.
7. ஐந்து விவசாய மந்திரங்கள் யாவை?
8. தொழு உரம் என்றால் என்ன?
9. புஞ்சை நிலத்திற்கு இடப்படும் இயற்கை உரம் பற்றிக் கூறுக
10. ஊடுபயிர் விளைச்சல் எவ்வாறு அதிகரிக்கச் செய்யும்?
11. பூச்சிக்கொல்லியால் ஏற்படும் பாதிப்புகள் யாவை?

12. இயற்கை பூச்சிக்கொல்லிகள் தயாரிக்கும் முறைகள் யாது?
13. இயற்கை பூச்சிக்கொல்லியால் ஏற்படும் பயன்கள் யாவை?
14. இயற்கை உரத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை?
15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின- தொடரின் பொருள் யாது?
இருப்பிடத்தை விட்டு வாழ்வதற்குகாக ஏதிலியாக எங்கோ போயின.
16. நட்பெழுத்துகள் என்றால் என்ன? 17. அழகிய பெரியவன் குறிப்பு வரைக.
18. வளருங் காவில் முகில்தொகை ஏறும் - தொடர் குறிப்பிடுவது யாது?
19. பள்ளு இலக்கியத்தின் உட்கோள் யாது?
20. பள்ளு இலக்கியத்தின் பெருமைக்கு சுட்டும் தொடர்கள் யாவை?
21. பள்ளு இலக்கியம் கூறும் நெல் வகைகள் சிலவற்றை குறிப்பிடுக
22. திருமலை முருகன் பள்ளுவில் குறிப்பிடும் மாடுவகைகள் யாவை?
23. உழவு கருவிகள் சிலவற்றை குறிப்பிடுக.
24. கங்காணி என்பதன் விளக்கம் தருக.
25. திருமலை முருகன் பள்ளில் விரவிவரும் பாவகைகள் யாவை?
26. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.
27. வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.
28. உடனிலை மற்றும் வேற்றுநிலை மெய்மயக்கமாக உள்ள சொற்களை எடுத்தெழுதுக.?

## 4.சிறுவினாக்கள்

1.வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? ___ நும் கருத்தை எழுது
2.காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது?, ஏன்?
3."சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4.ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.
5.தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இனவெழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.

## 5.பெரு வினா:

1."சுற்றுச் சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.
2.திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.
3.யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை, குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

# இயல் - 3
# பீடு பெற நில்

## 1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. மலை, குன்றுகள் குறித்த ஆய்வு

அ) Sociology ஆ) Epigraphy இ) Biology ஈ) Orology

2. "சேயோன் மேய மைவரை உலகம்" - இப்பாடல் இடம்பெற்ற நூல் அ) நன்னூல் ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) நற்றிணை

3. காவடிச்சிந்தின் தந்தைஅ) இரசூல் கம்சதோவ் ஆ) அண்ணாமலையார் இ) மல்லார்மே ஈ) வால்ட் விட்மன்

4. சிதவல் என்பதன் பொருள்

அ) தலைப்பாகை ஆ) தண்டு இ) தலைவன் ஈ) கூந்தல்

5. புறம்,புறப்பாட்டு என அழைக்கப்படும் நூல்

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) பரிபாடல் ஈ) புறநானூறு

6. எழுத்து இதழைத் தொடங்கியவர்

அ) சி.சு.செல்லப்பா ஆ) பி.எஸ்.இராமையா இ) ஆர்.பாலகிருஷ்ணன் ஈ) அண்ணாமலையார்

7. திணை,பால்,எண்,இடம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உறுப்புஅ) பகுதி ஆ) சந்தி இ) இடைநிலை ஈ) விகுதி

8. சரியானவற்றைத் தேர்தெடுக்க ___ உண்பான்

அ)உண்+பா+ன் ஆ)ஊண்+பான் இ) உண்+ப்+ஆன் ஈ)உண்+பான்

9. தமிழ்ச்சொல்லைக் கண்டறிக - ர்ளைவழசல

அ) வணிகம் ஆ) புவியியல் இ) வரலாறு ஈ) தொல்லியல்

10.சிந்துவெளிப்பண்பாட்டின் திராவிட அடித்தளம்" என்ற நூலின் ஆசிரியர்அ) சி.சு.செல்லப்பா ஆ) பி.எஸ்.இராமையா இ) ஆர்.பாலகிருஷ்ணன் ஈ) அண்ணாமலையார்

## 2.ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. மலை இடப்பெயர்கள் ஓர் ஆய்வு கட்டுரையை எழுதியவர் - ஆர் பாலகிருஷ்ணன், இ.ஆ.ப

2. பீடு பெற நில் எனும் இயலின் நோக்கம் யாது? நம் பண்பாட்டை காப்பாற்றுதல்

3. மனித சமூகத்தின் ஆதி நிலம் ----- - மலை

4. மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வைஎன்னவென்று அழைப்பர்ஓராலாட்ஜி(அ)ஆராலாட்ஜி

5. திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்" என அழைத்தவர் யார்? - கமில் சுவலபில்

6. சேயோன் என அழைக்கப்படும் கடவுள் ------ - முருகன்

7. கடையெழு வள்ளல்கள் எங்கு தலைவராக விளங்கினர்? - மலைகளின்

8. நீலகிரி மலையில் உள்ளவர் ------- இனத்தவரதோடர்

9. யாருடைய வீகளில் திண்டுகள் முக்கிய இடம் பெறுகிறது? ___ நீலகிரி வாழ் தோடர்கள்

10. தாழ்வாரத்தை 'மெட்டு" எனக் குறிப்பவர் யார்?, - குறும்பர்

11. மலை என்ற சொல் சமஸ்கிருதத்தில் எவ்வாறு வழங்குகிறது? - மலய

12. மலை தொடர்பான பெயருடைய மன்னன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்? -பாண்டிய நாடு,மலயத்துவஜ

13. மலைய என்ற திராவிடச்சொல்லின் பொருள் --- அரண்

14. மலை என்ற சொல் எந்த நிலப்பகுதியில் வழங்கப்படவில்லை? ___சிந்துவெளிப் பண்பாட்டு நிலத்தில்

15. ஆந்திராவில் மலையை குறிக்கும் சொல் - மலா

16. கோடை எனும் சொல்லிற்கு வழங்கும் பொருள் ---- மலை

## காவடிச் சிந்து

1. வழி நடைப்பாடலாக இயற்றிய பாடல் வடிவம் எது? - காவடிச் சிந்து
2. சென்னிகுளம் அண்ணாமலையார் யார் மீது காவடிச் சிந்து பாடியுள்ளார்?- கழுகுமலை முருகன்
3. திருப்புகழை இயற்றியவர் யார்? - அருணகிரிநாதர்
4. அண்ணாமலையார் இயற்றிய காவடிச்சிந்து எதனுடைய தாக்கம் எனக்குறிப்பிடப்படுகிறது? - அருணகிரியாரின் திருப்புகழ்
5. காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கபடுபவர் யார்? சென்னிகுளம் அண்ணாமலையார்
6. ஊற்று மலை யாருக்கு சொந்தமானது? குறுநிலத்தலைவர் மருதப்பத்தேவர்

## குறுந்தொகை (வெள்ளி வீதியார்)

1. திருமண வாழ்வில் எவை விளையும்? - அன்பும், அறனும்
2. வெள்ளிவீதியார் என்பவர்ஒரு-----புலவர் பெண்பாற்புலவர்
3. சங்க இலக்கியத்தில் திருமணம் எத்தனை வகைப்படும்?- 2. களவு, கற்பு
4. சிதவல் என்பதன் பொருள் - தலைப்பாகை
5. தண்டு என்பதன் பொருள் - ஊன்றுகோல்
6. குறுந்தொகைக்கு வழங்கும் அடைமொழி யாது நல்ல
7. குறுந்தொகையின் பாடல்கள் எத்தனை 401
8. குறுந்தொகைக்கு கடவுள் வாழ்த்து பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்
9. தொகை நூலில் வெள்ளிவீதியார் எத்தனை பாடல்களைப் பாடியுள்ளார் - 13
10. குறுந்தொகையை தொகுத்தவர் - பூரிக்கோ

## புறநானூறு (கடலுள் மாய்ந்த இளம்வழுதி)

1. உண்டாலம்மம எனத்தொடங்கும் புறநானூற்று பாடலைப் பாடியவர் - கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
2. தமிழரின் வாழ்வியல் கருவூலமாக அமைந்த நூல் - புறநானூறு
3. புறநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்கள் - புறம், புறம் பாட்டு
4. வழுதி என்னும் சொல் எம்மன்னர்களைக்குறிக்கிறது? -பாண்டியர்கள்
5. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி எத்தனை பாடல்களை எழுதியுள்ளார்? -2. புறநானூறு -1, பரிபாடல் - 1

## வாடிவாசல் ( சி.சு. செல்லப்பா)

1. வாடிவாசல் குறும்புதினத்தின் ஆசிரியர் யார்? - சி.சு. செல்லப்பா
2. 'எழுத்து'' இதழினைத் தொடங்கியவர் யார்? - சி.சு. செல்லப்பா
3. சாகித்ய அகாடமி விருது பெற்ற சி.சு செல்லப்பாவின் நூல் - சுதந்திர தாகம் 2001
4. சிறுகதைக்கும் புதினத்திற்கும் இடைப்பட்ட வடிவம் எது? - குறும்புதினம்
5. 'ஏறு தழுவுதல்'' பற்றிக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல் எது? - கலித்தொகை
6. வாடிவாசல் கதையில் 'பிச்சி'' அடக்கிய காளையின் பெயர் - காரி

## திருக்குறள்

1. திருக்குறளின் இயல்கள் எத்தனை? 9
2. அறம், பொருள் இன்பம் - பாலுக்குரிய இயல்களை குறிப்பிடுக. 4, 3, 2
3. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை? 38
4. பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை? 70
5. காமத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை? 25
6. பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் - அதிகாங்களை குறிப்பிடுக - 4, 20, 13, 1
7. அரசியல், அமைச்சியல், ஒழிபியல் - அதிகாரங்களை குறிப்பிடுக. 25, 32, 13
8. களவியல், கற்பியல் - அதிகாரங்களை குறிப்பிடுக. 7, 18
9. திருக்குறள் எந்த கணக்கில் அடங்கும்? பதினெண்கீழ்க்கணக்கு

10. குறள் என்பது----- ஈரடி வெண்பா
11. திருக்குறளின் சிறப்பினைக் கூறும் நூல் ------------ - திருவள்ளுவ மாலை
12. திருக்குறள் எத்தனை சீர் அமைப்பெற்றுள்ளது? 7
13. உலக மொழிகள் அனைத்திலும் மொழிப்பெயர்க்கப்பட்ட நூல் எது? - திருக்குறள்
14. திருக்குறளுக்கு வழங்கிய உரைகள் சிறந்த உரை எனக்குறிப்பிடுவது யாருடைய உரை? பரிமேலழகர்

## 3.குறுவினாக்கள்:

1. சங்க இலக்கியத்தில் மலை பற்றி குறிப்பிடும் மேற்கோள்களை குறிப்பிடுக.
2. மலை என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள மாநிலங்களை பட்டியலிடுக?
3. கோட்டை எனும் சொல் குறிக்கும் பிற மொழி சொற்களை பட்டியலிடுக.
4.காவடிச் சிந்து எவ்வாறு தோன்றியது?
5.சென்னிகுளம் அண்ணாமலையார் - குறிப்பு வரைக.
6.நல்ல குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?
7.தமிழர்கள், புகழ் பழியை எவ்வாறு ஏற்றதாக் புறநானூறு கூறுகிறது?
8.பொதுவியல் திணை என்றால் என்ன?
9.பொருண்மொழிக் காஞ்சித் துறை விளக்குக.
10.விகுதிகள் எவற்றை உணர்த்தும்?
11.பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?
12.தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?
13.”மருந்தாகித் தப்பா - உவமையைப் பொருளோடு பொருத்துக.
14.நல்ல செயல்களை விரைந்து செய்யச் சொல்வதை குறள் வழி விளக்குக.
15.சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
16.மருந்து மரமாக இருப்பவர் யார்? மருந்து எது?

## 4.சிறுவினாக்கள்:

1.புறநானூற்று பாடலால் அறியும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.
2.புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.
3.தமிழ் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
4.மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது -என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க
5.சங்ககாலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
6.இக்காலச்சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.
7.தீயினால் சுட்ட புண் - இக்குறட்பாவில் வரும் அணியை விளக்குக.
8.புகழுக்குரிய குணங்களாக நீவிர் கருதுவன யாவை?
9.புகழின் பெருமையைப் பொதுமறை வழி நின்று கூறுக.
10.சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்குக. ”வினைவலி என்ற குறளோடு ஒப்பிடுக.
11.விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.

## 5.பெருவினாக்கள்:

1.பாதசாரிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.
2.இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க
3.வாடி வாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.
4.கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.
5.அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

# இயல் - 4

# கேடில் விழுச்செல்வம்

## 1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்போர்
அ) ஆசிரியர் ஆ) கணக்காயர் இ) குரவர் ஈ) குரு
2. சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1867 ஆ) 1857 இ) 1886 ஈ) 1875
3. 'பிள்ளைக்கூடம்'' என்னும் கவிதை எந்த நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது அ) கொடிவிளக்கு ஆ) நெருஞ்சி இ) மறுபயணம் ஈ) சுடுபூக்கள்
4. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) புறநானூறு
5. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 18 இ) 27 ஈ) 3
6. பெண்களுக்காக பாரதி எழுதிய குறள் வெண்பா இடம் பெற்ற இதழ் அ) இந்தியா ஆ) சுதேசமித்திரன் இ) சக்கரவர்த்தினி ஈ) நவசக்தி
7. சினத்தீ - இச்சொல்லில் பயின்று வருவது
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி
8. இறைச்சி எப்பாடலில் பயின்று வரும்அ) அகப்பாடல் ஆ) புறப்பாடல் இ) அகப்புறப்பாடல் ஈ) இவை மூன்றிலும்
9. கண்ணன் புலிபோலப் பாய்ந்தான் - என்பதில் உவமை எது?
அ) கண்ணன் ஆ) புலி இ) போல ஈ) பாய்ந்தான்
10. ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக்கூறுவது
அ) உருவகம் ஆ) உவமை இ) உள்ளுறை ஈ) இறைச்சி

## தமிழகக் கல்வி வரலாறு

**2.ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1. தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை ------ என்கிறது ஓதற்பிரிவு
2. கல்வியின் பொருட்டு தோன்றும் மெய்ப்பாடு ----------- பெருமிதம்
3. மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ள நூல்கள்? நன்னூல், தொல்காப்பியம்
4. புறநானூற்றில் கல்வியின் சிறப்பை எடுத்துக்கூறிய பாண்டிய மன்னன்---- ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்
5. சங்கம் என்ற அமைப்பின் பொருள்--- பலர் கூடி விவாதித்தல்
6. கற்பிக்கும் ஆசிரியர் எத்தனைப் பிரிவுகளை உடையவர்கள்? 3
7. பட்டினிக்குரத்தி என்பவள் யார்? சமண பெண் ஆசிரியர். விளாம்பாக்கத்தில் சமணப்பள்ளியை நிறுவியவர்
8. பட்டிமண்டம் என்பது கருத்துகள் விவாதிக்கும் இடம் எனக் கூறிய நூல்----மணிமேகலை
9. காஞ்சிபுரத்துக்கு வந்த சீனத்துறவி யார்? யுவாங்சுவாங்
10. திண்ணைப் பள்ளியை ஸ்காட்லாந்தில் எவ்வாறு அழைத்தனர்?மெட்ராஸ் காலேஜ்
11. குருகுலத்தின் முக்கிய அம்சம் யாது? வாழ்வியலைக் கற்பிப்பது
12. தெற்றிப்பள்ளி என்றால் என்ன? திண்ணைப் பள்ளி
13. திண்ணைப் பள்ளியின் ஆசிரியர் ------- கணக்காயர்
14. திண்ணைப் பள்ளி யாருடைய விருப்பபடி இருந்தது? ஆசிரியரின
15. சென்னையில் எத்தனை திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்தன? 12, 498
16. ஐரோப்பிய கல்வியைவிட தமிழகக் கல்வி சிறந்தது என்றவர்-------- தாமஸ் மன்றோ
17. அச்சு இயந்திரத்தை வடிவமைத்தவர் யார்? ----- ஜான் கூடன் பர்க்

18. இந்தியாவில் அச்சேரிய முதல் மொழி ------------ தமிழ்
19. ஆசிரிய பயிற்சி பள்ளியை ஆரம்பித்தவர் யார், டச்சுக்காரர்
20. இந்தியர்களின் கல்விக்காக ஆண்டுக்கு 1 லட்சம் நிதி ஒதுக்கியது ---- லண்டன் பாராளுமன்றம்
21. இந்திய கல்வி வளர்ச்சியின் மகாசாசனம் எனப் போற்றுவது----- சார்லஸ் வுட்டின் அறிக்கை
22. சீடை முறை, தாய்மொழி வழிக் கல்வி கட்டாயப்படுத்தியவர் ---------------- ஹண்டர்கல்விக்குழு
23. பள்ளி தொடங்கும் பொறுப்பை தனியாருக்கு வழங்கிய அமைப்பு----- ஹண்டர் கல்விக்குழு
24. அனைவருக்கும் இலவச கட்டாய கல்வி கொண்டு வந்த சட்டம் எது? அரசியலமைப்புச்சட்டம்45ன்கீழ்
25. எத்தனை வயதுவரை இலவச கட்டாயக் கல்வி---- 14 வயது

## பிள்ளைக் கூடம்

1. பிள்ளைக்கூடம் பாடலில் வரும் வேம்பின் வயது----- 50
2. பிள்ளைக்கூடம் பாடலில் வரும் ஓணான் என்ன செய்கிறது? தியானம் செய்கிறது

3. பிள்ளைக்கூடம் பாடலில் எதனை அளக்க வேண்டும்? எறும்புகளின் வேகத்தை
4. பிள்ளைக் கூடம் எனும் பாடல் எந்த நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது? கொடி விளக்க
5. இரா. மீனாட்சி எங்கு வாழ்ந்து வருகிறார்? பாண்டிச்சேரி ஆரோவில்

## நற்றிணை

1. வறுமையில் எவ்வாறு வாழ வேண்டும்? செம்மையாக
2. எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்துப்பாடுவது---- நற்றிணை
3. நற்றிணையின் அடிவரையறை ---------- 9 -12
4. போதனாரின் பாடல் அடிகள் எத்தனை? 13
5. நற்றிணையில் போதனார் எத்தனையாவது பாடலைப் பாடியுள்ளார்? 110
6. நற்றிணைக்கு கடவுள் வாழ்த்து பாடியவர் ----------- பாரதம் பாடிய பெருந்தேவனார்
7. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்? பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி
8. "மனை மருட்சி" என்று கூறப்படும் துறை எது?மகள் நிலை உரைத்தல்
9. நற்றிணை பாடலில் வரும் தலைவியின் பொற்சிலம்பில் உள்ள பரல்கள் முத்து

## தொல்காப்பியம்

1. காலத்தால் பழமையான இலக்கண நூல்---- தொல்காப்பியம்
2. தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்கள் எத்தனை? 3
3. தொல்காப்பியத்தில் உள்ள ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள இயல்களின் எண்ணிக்கை 9
4. ஆசிரியர் கூறும் கருத்தை இருமுறை கேட்பவன் பெறும் திறன் யாது? நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன்
5. மூன்றுமுறை பாடம் கேட்கும் மாணவர்கள் எத்தகைய ஆற்றலைப் பெறுவர்? பிறருக்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர்

## இதழாளர் பாரதி

1. பாரதியார் தமிழாசிரியராகப் பணியாற்றிய பள்ளி -------- மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி
2. பாரதியார் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய இதழ் ---------- சுதேசமித்திரன்
3. இதழில் முதன் முதலாக கருத்துப்படம் அறிமுகப்படுத்தியவர் ------ பாரதியார்
4. எந்த இதழ்களைப் பார்த்து கருத்துப்படங்களை கொண்ட இதழ் நடத்த விரும்பினார்? லண்டன், பிரெஞ்ச், இந்தி
5. பாரதி, கருத்துப்படங்களை வெளியிட்ட இதழ்கள்----- இந்தியா, விஜயா
6. பாரதி பெண்களுக்காகக் குறள் வெண்பா எழுதிய இதழ் -------- சக்ரவர்த்தினி

7. இந்தியா வார இதழ் எந்த கிழமையில் வெளியாகும்? சனிக்கிழமை
8. சிவப்பு வண்ணத்தில் வெளியிட்ட இதழ் ------ இந்தியா
9. சிவப்பு வண்ணம் எதைக் குறிக்கிறது? புரட்சி, விடுதலை
10. பாரதி, தம் மனை செல்லம்மாவை குறிப்பிட்ட பெயர்கள்----- கண்ணம்மா, வள்ளி

## படைப்பாக்க உத்திகள்

1. புலி போலப் பாய்ந்தான் ---- வகை உவமை தொழில் வகை
2. மழை போலக் கொடுக்கும் கை ------ வகை உவமை பயன் உவமை
3. துடி போலும் இடை ---------- வகை உவமை வடிவம்
4. தளிர் போலும் மேனி ----------- உரு உவமை
5. சங்கப்பாடலில் அதிகம் பயின்று வந்துள்ள அணி-------- உவமை அணி
6. ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமைவது ---------- உருவகம்
7. மலைக்கிழவியின் நரைத்த கூந்தல் ------அருவி இதில் வந்துள்ள உருவகம் நிறம் உருவகம்
8. குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படுவது -------------- உள்ளுறை
9. உள்ளுறை எவற்றின் அடிப்படையில் தோன்றும்? வினை, பயன்
10. வடமொழியினரின் தொனிக்கு இணையானது --- இறைச்சி
11. அகப்பாடலில் மட்டுமே வருவது ---------- இறைச்சி

## 3.குறுவினாக்கள்

1.உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.
2.மொழியின் ஆதிக்கம் குறித்து மா.இராசமாணிக்கனாரின் கருத்துயாது?
3.மூவகை ஆசிரியர் மற்றும் மாணவர் பிரிவுகளை எழுதுக.
4.கற்கும் இடத்தை குறிக்கும் இலக்கியங்கள் எவை? எவை?
5.உவமை, உருவகம் - வேறுபடுத்துக.
6.உவமை அமைக்கும் உறுப்புகளைச் சான்றுடன் விளக்குக.
7.உவமை எவற்றின் அடிப்படையில் தோன்றும்?
8.தொல்காப்பிய உரையாசிரியர்கள் யாவர்?
9.சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராச மாணிக்கர் கூற்று யாது?
10.இங்கே ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள்
எண்ணச் சொல்கிறவர்கள் யார்?எண்ணுபவர்கள் யார்?

## 4.சிறுவினாக்கள்:

1.தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
2.சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் குறிப்பு வரைக.
3."ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி"
4.உள்ளுறை உவமம் என்றால் என்ன? இறைச்சி என்றால் என்ன?

## 5.பெருவினாக்கள்

1.பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக்கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறுமாறுதல்களை விவரிக்க.
2.பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?
3.தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

## இயல் : 5

## நாளெல்லாம் வினைசெய்

### 1.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. நாட்குறிப்பை ஆங்கிலத்தில் --------------------- என்பர்
அ) டைஸ் ஆ) டைரியம் இ) டைரி ஈ) எபிமரிடிஸ்
2. ஆனந்தரங்கருக்கு தொடர்பில்லாதது
அ) மொழிபெயர்பாளர் ஆ)இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
3. 'சின்னசீறா'' என்னும் நூலைப் பாடியவர்
அ) சீதக்காதி ஆ) கடிகை முத்துப்புலவர் இ) பனு அகமது மரைக்காயர் ஈ) அபுல்காசிம்
4. அகநானூற்றின் வேறு பெயர்அ) அகப்பொருள் ஆ) குறுந்தொகை இ) நானூறு ஈ) நெடுந்தொகை
5. 'வானம் வசப்படும்'' என்னும் புதினத்தின் ஆசிரியர்
அ) பாரதிதாசன் ஆ) கண்ணதாசன் இ) பிரபஞ்சன் ஈ) வண்ணதாசன்
6. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது ------------------
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) நேர் முன் நேர் ஈ) மா முன் நேர்
7. கலிப்பாவிற்குரிய ஓசை -----------
அ) துள்ளல் ஆ) செப்பல் இ) அகவல் ஈ) தூங்கல்
8. அளவடி என்பது ----------- சீர்களாலானது
அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு
9. இலக்கணக் குறிப்பு தருக ___ அறன்
அ) முதற்ப்போலி ஆ) இடைப்போலி இ) ஈற்றுப்போலி ஈ) வினைத்தொகை
10. தமிழ்ச்சொல்லைக் கண்டறிக - னுழுஉரஅநவெ
அ) ஒப்பந்தம் ஆ) ஆவணம் இ) கோப்பு ஈ) பட்டியல்

## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

### 2.ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. புதுச்சேரி வரலாற்றினைப் பதிவு செய்தவரில் முதன்மையானவர் யார்? - ஆனந்தரங்கர்
2. ஆனந்தரங்கர் நாட்குறிப்பில் எந்த நூற்றாண்டின் வரலாற்றினை அறிந்துக்கொள்ள முடிகிறது?- கி.பி.18
3. டைரியம் என்பது எம்மொழிச் சொல்?- இலத்தீன்
4. நாட்குறிப்பில் முன்னோடியாக திழ்வது எது? - எப்ஹெமெரைடுஸ்
5. நாட்குறிப்பில் முன்னோடி எந்த மொழியில் வெளியானது?- கிரேக்கம்
6. எப்ஹெமெரைடுஸ்( நீற்றுஆநுசுஐனுநுளு) என்பதன் பொருள் யாது? - ஒரு நாளுக்கான முடிவு என்பது பொருளாகும்.
7. யார் காலம் முதல் நாட் குறிப்பு எழுதும் வழக்கம் இருந்தது? முகலாய மன்னர் பாபர் காலம் முதல்
8. யாருடைய ஆட்சி காலத்தில் நாட்குறிப்பு எழுதுவது தடை செய்யப்பட்டது? - ஔரங்கசீப்
9. போர்ச்சுகீசிய மாலுமி யார்? - வாஸ்கோடகாமா
